டாக்டர்கள் பாதுகாப்பை உறுதி செய்ய மருத்துவமனைகளில் இரவு நேர ரோந்து: பொதுமக்கள் நுழைய கட்டுப்பாடு

மாநில அரசுகளுக்கு மத்திய அரசு யோசனை

புதுடெல்லி, ஆக.29–

டாக்டர்கள் பாதுகாப்பை உறுதி செய்ய மருத்துவமனைகளில் இரவுநேரரோந்துக்குஏற்பாடுசெய்ய வேண்டும், முக்கிய பகுதிகளில் பொதுமக்கள் நுழைவதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு யோசனை தெரிவித்துள்ளது.

கொல்கத்தா பெண் டாக்டர் கொலை வழக்கை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ள சுப்ரீம் கோர்ட், டாக்டர்கள் உள்ளிட்ட மருத்துவ பணியாளர்களின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை பரிந்துரை செய்ய தேசிய அளவிலான குழுவை அமைத்துள்ளது.

அந்த குழு அறிக்கை தாக்கல் செய்யும் வரை, மாநில அரசுகளே குறைந்தபட்ச நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் போலீஸ் டி.ஜி.பி.க்களுடன் மத்திய சுகாதார அமைச்சக செயலாளர் பேச வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இந்த உத்தரவுப்படி, அனைத்து மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் போலீஸ் டி.ஜி.பி.க்களுக்கு மத்திய சுகாதார அமைச்சக செயலாளர் அபூர்வா சந்திரா ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:–

சுப்ரீம் கோர்ட் உத்தரவு அடிப்படையில், மருத்துவமனைகளில் டாக்டர்கள் பாதுகாப்புக்கும், அவர்களுக்கு பாதுகாப்பான பணி சூழ்நிலையை உருவாக்கவும் உடனடியாக கீழ்கண்ட நடவடிக்கைகளை எடுக்கலாம்.

குற்றத்துக்கான தண்டனை

சுகாதார பணியாளர்கள் பாதுகாப்புக்கான மாநில சட்டங்கள், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் ஆகியவற்றில் டாக்டர்கள் மீது தாக்குதல் நடத்தும் குற்றத்துக்கான தண்டனை விவரங்களையும், அபராத விவரங்களையும் மருத்துவமனை வளாகத்தில் அனைவரது பார்க்கும் இடங்களில் மாநில மொழியிலும், ஆங்கிலத்திலும் எழுதி வைக்க வேண்டும். பாதுகாப்பு நடவடிக்கைகளை அமல்படுத்துவதற்காக மூத்த டாக்டர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் அடங்கிய மருத்துவமனை பாதுகாப்பு குழு, வன்முறை தடுப்பு குழு ஆகியற்றை அமைக்க வேண்டும். மருத்துவமனையின் முக்கிய பகுதிகளில் பொதுமக்களும், நோயாளிகளின் உறவினர்களும் நுழைவதை ஒழுங்குபடுத்த வேண்டும். நோயாளிகளை உடன் இருந்து கவனிப்பவர்களுக்கும், உறவினர்களுக்கும் பார்வையாளர் அனுமதிச்சீட்டு முறையை கண்டிப்புடன்அமல்படுத்தவேண்டும். இரவு பணியின்போது, பயிற்சி டாக்டர்களும், நர்சுகளும் மருத்துவமனையின் பல்வேறு பகுதிகளுக்கும், விடுதி கட்டிடத்துக்கும் பாதுகாப்பாக நடமாடுவதை உறுதி செய்ய வேண்டும். அனைத்து பகுதிகளிலும் விளக்கு வசதி செய்யப்பட வேண்டும்.

மருத்துவமனை வளாகத்தில் இரவுநேர ரோந்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். 24 மணி நேர பாதுகாப்பு கட்டுப்பாட்டு அறை உருவாக்க வேண்டும். அருகில் உள்ள போலீஸ் நிலையத்துடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும்.

பாலியல் தொல்லை தொடர்பாக உள்மட்ட குழுவை மருத்துவமனை நிர்வாகம் அமைக்க வேண்டும். கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாட்டை அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

துணை கலந்தாய்வுக்கு பின் காலியாகவுள்ள என்ஜினீயரிங் படிப்பிற்கு நேரடி சேர்க்கை: அமைச்சர் பொன்முடி தகவல்

சென்னை, ஆக.29–

துணை கலந்தாய்வுக்கு பின் காலியாக இருக்கும் என்ஜினீயரிங் படிப்பிற்கு நேரடி சேர்க்கை நடத்தப்படும் என்று அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.

தேசிய விண்வெளி தினத்தையொட்டி, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் சார்பில், சென்னையைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை போட்டி, ஓவிய போட்டி என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில், வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி, சென்னை கிண்டி பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் நேற்று நடைபெற்றது. இதில், உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி பங்கேற்று பரிசுகளை வழங்கி கவுரவித்தார்.

தொடர்ந்து விழாவில் அமைச்சர் பொன்முடி பேசுகையில், "மாணவர்கள் படிக்கும் போதே அறிவியல் சிந்தனையை வளர்த்துக் கொள்ள வேண்டும். வகுப்பில் ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது ஆர்வமுடன் கேள்வி கேட்க வேண்டும். அதே நேரம் பகுத்தறிவு அடிப்படையில் அறிவை வளர்த்து கொள்வது அவசியமாகும். தற்போது தொழில்நுட்பம் பல மடங்கு முன்னேற்றம் கண்டுள்ளது. அதைக் கொண்டு அறிவியலை வளர்க்க வேண்டும் என்றார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:– என்ஜினீயரிங் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்களின் சுய விவரங்கள் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் பாதுகாப்பாக உள்ளது. மாணவர்கள் விவரங்கள் குறித்து தவறாக சித்தரித்து சமூக வலைதளத்தில் வெளியிட்ட நபர்கள் குறித்து சைபர் கிரைமில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உரிய விசாரணை நடத்துவார்கள். பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர் பணியிடங்கள் காலியாக இருப்பது குறித்து எங்கு கேட்க வேண்டுமோ, நீங்கள் (நிருபர்கள்) அங்கு கேளுங்கள்.

நடப்பாண்டு, என்ஜினீயரிங் கலந்தாய்வில் 3 சுற்றுகள் நிறைவில், ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 31 மாணவர்கள் சேர்ந்துள்ளனர். கடந்த ஆண்டு, துணை கலந்தாய்வு நிறைவில் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 620 பேர் சேர்ந்துள்ளனர். கடந்த ஆண்டை காட்டிலும் அதிக மாணவர் என்ஜினீயரிங் படிப்பில் சேர்ந்துள்ளனர். நடப்பாண்டு எஞ்சியுள்ள இடங்களுக்கான துணை கலந்தாய்வு நடத்தப்படும். அதன்பிறகு, நேரடி சேர்க்கை மூலம் மாணவர் சேர்க்கை நடத்த கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்றார்.

சென்னையில் கொளத்தூர் புதிய தாலுகா உதயம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஆக.29

சென்னை மாவட்டத்தில் 'கொளத்தூர்' புதிய தாலுகா உதயமாகி உள்ளது. அதற்கான அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் தண்டையார்பேட்டை, அமைந்தகரை, அயனாவரம், எழும்பூர், கிண்டி, மாம்பலம், மயிலாப்பூர், பெரம்பூர், புரசைவாக்கம், வேளச்சேரி, மதுரவாயல், திருவொற்றியூர், சோழிங்கநல்லூர், ஆலந்தூர், மாதவரம், அம்பத்தூர் என மொத்தம் 16 தாலுகாக்கள் உள்ளன. அதில் அயனாவரம் தாலுகாவில் உள்ள கொளத்தூரை பிரித்து புதிய கொளத்தூர் தாலுகா உருவாக்க தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அரசு செயலாளர் ராஜாராமன் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

சென்னை மாவட்டத்தில் உள்ள மத்திய சென்னை வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட அயனாவரம் தாலுகாவை சீரமைத்து கொளத்தூரை தலைமையிடமாக கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படுகிறது.

தற்போது அயனாவரம் தாலுகாவில் கொளத்தூர், பெரவள்ளூர், கொன்னூர் மற்றும் அயனாவரம் என 4 பகுதிகள் உள்ளன. அதில் உள்ள கொளத்தூரை தலைமையிடமாக கொளத்தூர் என்ற புதிய தாலுகா உருவாக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் கொளத்தூர் மற்றும் பெரவள்ளூர் அதன் பகுதிகளான சிறுவள்ளூர், சின்னசெம்பரம்பாக்கம் ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டு உள்ளன. அதேபோல் இனி அயனாவரம் தாலுகாவில் கொன்னூர் அதன் பகுதிகளான மல்லிகைச்சேரி, மற்றும் அயனாவரம் அதன் பகுதிகளான அயனாவரம் பகுதி–1 மற்றும் பகுதி2 ஆகியவை இருக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் புதிய தாலுகாவாக உருவாக்கப்பட்டுள்ள கொளத்தூரில் புதிய அரசு பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அதற்கான அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளன.

ரேஷன் கடைகள் 31ந் தேதி திறந்திருக்கும்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஆக.29–

அனைத்து ரேஷன் கடைகளும் 31–ந்தேதி திறந்திருக்கும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குனர் த.மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அனைத்து ரேஷன் கடைகளிலும் மாதத்தின் கடைசி பணி நாளில் இன்றியமையாப் பண்டங்கள் வினியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை.

ஆனால் இந்த மாதம் அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் இன்றியமையாப் பண்டங்கள் தடையின்றி கிடைக்கப்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் வருகிற 31ந் தேதி (சனிக்கிழமை) அனைத்து ரேஷன் கடைகளிலும் இன்றியமையாப் பண்டங்கள் வினியோகம் செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

இந்த வாய்ப்பினை பயன்படுத்தி ஆகஸ்டு மாதத்திற்கான பொருட்கள் பெறாத அட்டைதாரர்கள் பெற்று பயனடையலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னையின் பெருமை பேசும் கொண்டாட்டங்கள்– கருத்தரங்கம்: அமைச்சர் சாமிநாதன் துவக்கினார்

சென்னை, ஆக.29–

சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக கலையரங்கில் அமைச்சர் சாமிநாதன் அருங்காட்சியகங்கள் துறை சார்பில் நடைபெற்ற சென்னையின் பெருமை பேசும் கொண்டாட்டங்கள் தொடர்பான "பண்பாடு ஒரு மீள்பார்வை" என்ற கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் சாமிநாதன் பேசியதாவது:–

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் சென்னையின் பெருமையைப் பேசும் விதமாக 'சென்னை தினம்' கொண்டாடப்பட்டு வருகின்றது. சென்னையின் 385–வது பிறந்த நாளையொட்டி சிறப்புக் கண்காட்சி நடந்து வருகிறது. இதில் சென்னை லட்சக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதை மெய்ப்பிக்கும் விதமாக ராபர்ட் புரூஸ் புட் கண்டெடுத்த பழைய கற்கால கருவிகள், 2 ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த கீழடி அகழாய்வில் கிடைத்த மட்கலன்கள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

அருங்காட்சியகங்கள் துறை
"பண்பாடு - ஒரு மீள்பார்வை"
கருத்தரங்கு

கண்காட்சியில் எம்டன் கப்பல் சென்னை மீது எறிந்துவிட்டு சென்ற வெடிகுண்டுகளின் எச்சங்கள் மற்றும் இசைக் கருவிகள், இன்றைய தலைமுறையினர் அறிந்திராத தோலா, எடைக் கற்கள், மரக்கால், படி போன்ற அளவைகள் அழகாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட வாட்கள், பீரங்கிக் குண்டுகள் ஆகியன சிறப்பு மிக்கவை.

இன்றைய தினம் சென்னையின் பெருமையை போற்றும் விதமாக "பண்பாடு ஒரு மீள் பார்வை" என்ற தலைப்பில் சென்னையின் தொன்மை பேசும் ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

அருங்காட்சியகத்தில் கடந்த 20–ம் தேதியிலிருந்து வருகின்ற 29ஆம் தேதி வரை கண்காட்சி நடைபெற்று வருகிறது. பெருமைக்குரிய சென்னை மாநகரம் எப்போது துவங்கப்பட்டது, அதனுடைய வரலாறும், அதேநேரத்தில், இந்தியாவிலேயே இரண்டாவது அருங்காட்சியகமாக சிறந்து விளங்கக்கூடிய, பெருமை பேசக்கூடிய வகையில் எழும்பூரில் உள்ள சென்னை அருங்காட்சியகம் அமைந்திருக்கிறது. வரலாற்றில் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் மாணவச் செல்வங்கள் கலந்து கொள்ளக்கூடிய நிகழ்வாக இந்த கருத்தரங்கு துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் உத்தரவின் பேரில் இக்கருத்தரங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல கலை, பண்பாடு என்பது தமிழருடைய பண்பாடு, இந்தியாவிலேயே இரண்டாவதாக சென்னை அருங்காட்சியகம் விளங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலா, பண்பாடு துறை அரசு முதன்மைச் செயலாளர் பி.சந்தர மோகன், அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் கவிதா ராமு, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

NOTICE

Notice is hereby given that We RND Investments Private Limited holding equity shares of Rs. 10/- each of M/s. Cholamandalam Investment and Finance Company Limited has misplaced the share certificates as below:

Name	Folio No.	No of Shares	Certificate No.	Distinctive No.	
				From	To
Cholamandalam Investment and Finance Company Limited	R 000204	50	12533	1966203	1966252
		50	12534	1966253	1966302
		50	12535	1966303	1966352
		50	12536	1966353	1966402
		50	12537	1966403	1966452
		50	12538	1966453	1966502
		50	12539	1966503	1966552
		50	12540	1966553	1966602
		50	12541	1966603	1966652
		50	12542	1966653	1966702

Finder may please contact: RND Investments Private Limited, Room No 1, 2nd Floor, 17/12, Venkatrathnam Nagar Ext, 2nd Street, Adyar, Chennai 600020 : Mobile -9820297761

ICICI Home Finance

பதிவு அலுவலகம்: ஐசிஐசிஐ வங்கி டவர்ஸ், பாந்த்ராகுர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை400051.
கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ எச்எப்சி டவர், அந்தேரி குரியா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை 400059, இந்தியா

கிளை அலுவலகம்: 1வது தளம், மனை எண். 8/3, முனிசிபில் காலனி சத்யா மேன்ஷன், கழிஞ்சூர் கிராமம், காங்கயநல்லூர் சாலை, காந்திநகர், காட்பாடி, வேலூர் 632006. **கிளை அலுவலகம்:** ஸ்ரீ பிரதர் ஹோம்ஸ், முதல் தளம், எண்.08, காந்தி சாலை, மேற்கு தாம்பரம், சென்னை 600 045.

அசையாச் சொத்துகளை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு (விதி 8(6)ஐ பார்க்கவும்)

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்ட, ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள/ஈடாக உள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துகள், "எங்கே எப்படி உள்ளதோ அப்படியே", "உள்ளது உள்ளபடி" மற்றும் 'எவ்வாறு உள்ளதோ அவ்வாறு' இங்கே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி விற்பனை செய்யப்படும்.

வ. எண்	கடன்தாரர்/ உடன் கடன்தாரர்கள் /உத்தரவாத தாரர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர்/ கடன் கணக்கு எண்.	ஈடுபெற்ற சொத்தின் (கள்) விவரங்கள், தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருந்தால்	நிலுவைத் தொகை	ரிசர்வ் விலை டேவணித் தொகை டெபாசிட்	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்	ஏலத் தேதி மற்றும் நேரம்	ஏலத் தேதிக்கு ஒரு நாள் முன்	SARFAESI நிலை
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)	(H)	(I)
1	ராஜகோபால் T K (கடன்தாரர்), R பத்மவிஜி (உடன் கடன்தாரர்கள்) NHCHE00000802978	பிளாட் எண். 3, 6வது தளம், டவர் எண். 36, கார்டன் சிட்டி DLF OMR, தாழம்பூர் கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம், தமிழ்நாடு	ரூ. 6147133.62/- (ஆகஸ்ட் 22, 2024 அன்று)	ரூ. 7,266,105/- ரூ. 726,611/-	23 செப். 24 காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை	1 அக்டோபர் 2024 மதியம் 2 மணி முதல் மாலை 3 மணி வரை	30 செப்டம்பர் 2024	சுவாதீனம்
2	R சுரேஷ் (கடன்தாரர்) யோகேஸ்வரி ராஜேந்திரன் (உடன் கடன்தாரர்கள்) LHANC00001474939	பிளாட் எண். S4, இரண்டாவது தளம், சர்வே எண். 4 & 5 (பகுதி), துணைப் பிரிவு ச.எண். 4/91A, மனை எண். 62 (பகுதி), VGP வீரபத்ரா நகர் பகுதி II, வேங்கைவாசல் கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா தற்போது தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், தற்போது செங்கல்பட்டு மாவட்டம், சென்னை.	ரூ. 4584773.32/- (ஆகஸ்ட் 23, 2024 அன்று)	ரூ. 4,797,000/- ரூ.479,700/-	23 செப். 24 காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை	1 அக்டோபர் 2024 மதியம் 2 மணி முதல் மாலை 3 மணி வரை	30 செப்டம்பர் 2024	அடையாள சுவாதீனம்

எங்கள் ஏல நிறுவனமான **ஸ்ரீராம் ஆட்டோமால் இந்தியா லிமிடெட்டின்** இணையதளத்தில் (URL Link-eauctions.samil.in) ஆன்லைன் ஏலம் நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிப்பாளர்களுக்கு மொத்த நிலுவைத் தொகையை கூடுதல் வட்டியுடன் **செப்டம்பர் 30, 2024** அன்று மாலை 5.00 மணிக்குள் செலுத்த கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது, இல்லையெனில் இந்த ஈடுபெற்ற சொத்துக்கள் மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி விற்கப்படும்.

வருங்கால ஏலதாரர்(கள்) விளம்பரத்தின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் கிளை அலுவலக முகவரியில் **செப்டம்பர் 30, 2024 அன்று மாலை 4.00 மணி** அல்லது அதற்கு முன் டேவணித் தொகை டெபாசிட்டை (EMD) RTGS/ டிமாண்ட் டிராப்ட் (DD) மூலம் (அட்டவணை E ஐப் பார்க்கவும்) சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) பதிவுப் படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலை ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில், **செப்டம்பர் 30, 2024 அன்று மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். டேவணித் தொகை டெபாசிட்டிற்கான டிமாண்ட் டிராப்ட் (DD) தேசியமயமாக்கப்பட்ட/ பட்டியலிடப்பட்ட வங்கியிலிருந்து, செங்கல்பட்டில் மாற்றத்தக்க வகையில் "**ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் -ஆக்ஷன்**" என்ற பெயரில் இருக்க வேண்டும்.

ஆய்வு, ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது டெண்டர்களை சமர்ப்பித்தல் தொடர்பான கூடுதல் விளக்கங்களுக்கு, ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை 9920807300 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்த ஒரு காரணத்தையும் அளிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, https://www.icicihfc.com/ஐப் பார்வையிடவும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
தேதி : 29.08.2024 | இடம் : தமிழ்நாடு
ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் I CIN : U65922MH1999PLC120106

இன்டோஸ்டார் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம் : யூனிட் எண்.305, 3வது தளம், விங் 2/E, கார்ப்பரேட் அவென்யூ,
அந்தேரி கட்கோபர் லிங்க் சாலை, சக்லா, அந்தேரி (கிழக்கு), மும்பை 400 093.

INDOSTAR

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு

இன்டோஸ்டார் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு வீட்டுக் கடன்/ அடமானக் கடன்/கட்டுமானக் கடனை வீட்டு மனைகளை அடமானம் வைத்து அனுமதித்துள்ளது. தேசிய வீட்டுவசதி வங்கி/ஆர்பிஐயின் வழிகாட்டுதல்கள் மற்றும் விதிகளின்படி கூறப்பட்ட கடன்களின் தொகையை ஒழுங்காக திருப்பிச் செலுத்தாத காரணத்தால் அவை இறுதியாக செயல்படாத சொத்துகளாக வகைப்படுத்தப்படுகின்றன. **இன்டோஸ்டார் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்** அதன் உரிமைகளைப் பயன்படுத்தி மற்றும் SARFAESI சட்டம், 2002ன் பிரிவு 13(2)ன் கீழ் இந்த அறிவிப்பை வெளியிட்டு, அந்தந்த கடன்தாரர்களுக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த நிலுவைத் தொகையை கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பின்வரும் கடன்தாரர்கள் தங்களுக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த நிலுவைத் தொகையையும் மேலும் கட்டணங்கள் மற்றும் வட்டியையும் சேர்த்து, கோரிக்கை அறிவிப்பின் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்தும் நாள் வரையிலான மொத்த தொகையையும் செலுத்துமாறு இந்த அறிவிப்பின் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில் IHFPL ஆனது சொத்துக்களை உடைமையாக்க, அப்புறப்படுத்த/விற்பனை மற்றும் நிலுவைத் தொகைக்கு எதிராக வருமானத்தை சரிசெய்வதற்கு அனைத்து அல்லது ஏதேனும் சட்ட உரிமைகளை எடுக்கும்.
சொத்துக்களில், கடன்தாரர்கள், மூன்றாம் தரப்பு ஆர்வத்தை உருவாக்கக் கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வ. எண்.	இடம்/ கடன் கணக்கு எண்	கடன்தாரர்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	சொத்து விவரங்கள்
1	வேலூர் LNVELLAP-06180003257, LNVELLAP-06180003258	செந்தில்குமார் பி (கடன்தாரர்) பூதனம் பரசுராமன் (உடன் கடன்தாரர்)	ஆகஸ்ட் 21 2024	ரூ.1037913/- (ரூபாய் பத்து லட்சத்து முப்பத் தேழாயிரத்து தொள்ளாயிரத்து பதிமூன்று மட்டும்)	சொத்தின் அனைத்து சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். நத்தம் பழைய எண் 440, புதிய எஸ். எண். 154/1, புதிய எஸ். எண். 440/127, மேட்டுத் தெரு, கஸ்தம்பாடி கிராமம், போளூர் தாலுக்கா, செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு 606903ல் உள்ளது. அதன் எல்லைகள் : கிழக்கு: ராமசாமிக்கு சொந்தமான சொத்து, மேற்கு: சொத்தின் மேற்கு பகுதி, வடக்கு: தெரு, தெற்கு: மாணிக்கத்திற்கு சொந்தமான சொத்து. விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக: 18 அடி, வடக்கிலிருந்து தெற்காக: 72 அடி, மொத்தம் 1296 சதுர. அடி.
2	சென்னை தாம்பரம் LNTAMLAP-07220025978	ராஜேஷ் கே (கடன்தாரர்) தனலட்சுமி ஆர் (உடன் கடன்தாரர்)	ஆகஸ்ட் 21 2024	ரூ.705231/- (ரூபாய் ஏழு லட்சத்து ஐந்தாயிரத்து இருநூற்று முப்பத் தொன்று மட்டும்)	சொத்தின் அனைத்து சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், நிலம் மற்றும் கட்டிடம். பழைய ச. எண். 170/2(பகுதி), ஏனாதிமேல்பாக்கம் கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 1312 சதுர அடி நிலம். இந்த சொத்தானது கும்மிடிப்பூண்டி சார் பதிவு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது. அதன் எல்லைகள் : கிழக்கு: மீதி நிலம், மேற்கு: 10 அடி அகல சாலை, வடக்கு: சீனிவாசன் மனை, தெற்கு: முத்துக்குமாருக்கு சொந்தமான 5 அடி பாதை
3	சென்னை காஞ்சிபுரம் LNCHNLAP 01230028234	முருகன் ஏ (கடன்தாரர்) அண்ணாமலை எம் (உடன் கடன்தாரர்)	ஆகஸ்ட் 21 2024	ரூ.777828/- (ரூபாய் ஏழு லட்சத்து எழுபத் தேழாயிரத்து எண்ணூற்று இருபத்தியெட்டு மட்டும்)	சொத்தின் அனைத்து சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். கிராம நத்தம் பழைய ச.எண். 304/19பகுதி, பட்டா எண் 12, புதிய ச.எண். 481/4, மணமை கிராமம், திருக்கழுகுன்றம் தாலுகாவில் உள்ள 4355.6 சதுர அடி நிலம். இந்த சொத்தானது திருக்கழுகுன்றம் சார் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டம் 603102ல் உள்ளது. அதன் எல்லைகள் : கிழக்கு: மீதி நிலம், மேற்கு: சுப்ரமணிய முதலியாருக்கு சொந்தமான நிலம், வடக்கு: நாகமணிக்கு சொந்தமான நிலம், தெற்கு: பொதுவான பாதை

இடம்: வேலூர், சென்னை
தேதி : 29.08.2024
ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இன்டோஸ்டார் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

BEFORE THE HON'BLE ADDITIONAL MAHILA COURT AT EGMORE
D.V.C. No.33 of 2024

Mrs.Ummu Salma, F/42,
Wife of Ahmed Abuacker,
No.22/61, Muniyappan Street,
Perambur, Chennai 600 011.
...Complainant
-Vs-
Mr.Ahmed Abuacker,
S/o.Ahmed,
No.39/12, Muniyappan Street,
Perambur, Chennai-600 011.
... Respondent

NOTICE

Please take notice that the Complainant had filed the Domestic Violence Case before the Hon'ble Additional Mahila Court at Egmore against the Respondent in DVC No.33 of 2024. Thereafter the above case was came up before this Hon'ble Court on 13.08.2024 has ordered notice to the respondent and the case was posted on 17.09.2024. You hereby called upon to appear either in person or through your counsel failing which the case will be heard and decided on merits in your absence.

K. Suthan
Counsel for Complainant

IN THE COURT OF VII ASST. CITY CIVIL JUDGE AT CHENNAI
O.S. No. 5194 of 2022

The DBS Bank India limited,
(erstwhile the Lakshmi Vilas Bank Limited),
K K Nagar Branch,
Plot No. 780, No.3 Munusamy Road, K K Nagar,
Chennai - 600 078. ... Plaintiff
Versus
1. S. Shanthi, Proprietor,
Uma Catering,
W/o. R. Mohanasundarm,
No. 1128, Kamarajar Salai,
K K Nagar, Chennai - 600 078.
2. M. Uma Maheshwari,
D/o. R. Mohanasundaram,
No. 3, BPS Flat, 1st Floor,
Pillayar Koil Street,
Nesapakkam, Chennai -600078.
... Defendants

Please take Notice that the above suit stands posted for hearing in the Honourable VII Assistant City Civil Judge, Chennai on 06.09.2024 for your appearance as the Defendants in the suit. The matter will be taken up for hearing at 10.30 A.M. On the said date, the matter will heard and decided in your absence if you do not enter appearance in the matter before them.

This Publication is effected as per Order of the Honourable VII Assistant City Civil Judge, Chennai dated 29.07.2024 in I.A. No. 2 of 2024 in O.S. No. 5194 of 2022.

L. SURYA ASSOCAITES,
Counsel for Plaintiff

---

kotak
Kotak Mahindra Bank

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 600 006

சுவாதீன அறிவிப்பு

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (54 ஆப் 2002) கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 3வது விதிமுறைக்கு ஏற்ப, கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, திரும்ப செலுத்தும் நாள் வரையிலான வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்களை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். எனினும், மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் /உடன்கடன்தாரர்கள் பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள், உடன்கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தில் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிகளுக்கு இணங்கவும், கீழ்க்கண்ட தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாக, பொதுமக்களுக்கு பொதுவாக எச்சரிக்கப்படுவது யாதெனில், அடையாளம் சுவாதீனம் எடுத்துக் கொண்ட மேற்சொன்ன அசையா சொத்து கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. பிரிவு 13(2)–ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பிய தேதி, நிலுவைத் தொகை, சொத்தின் விவரம், கடன்தாரர்கள் விவரம் மற்றும் செலுத்த வேண்டிய தொகை மற்றும் சுவாதீனம் எடுத்த தேதி ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கடன்தாரர், உடன்கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர் மற்றும் முகவரி கடன் கணக்கு எண். கடன் தொகை	அசையா சொத்தின் விவரம்	1. சுவாதீனத் தேதி 2. சுவாதீன வகை 3. டிமாண்ட் நோட்டீஸ் தேதி 4. நிலுவைத் தொகை ரூ.
திரு. காளிஸ்வரன் முத்துசாமி மற்றும் திருமதி. கே. வெண்ணிலா முகவரி : 5/23, சென்னை, தமிழ்நாடு & **திரு. காளிஸ்வரன் முத்துசாமி** பிளாட் எண்.எப்2, மனை எண்.19 , கோல்டன் ஹோம்ஸ், முதல் தளம், சரஸ்வதி நகர் விரிவு, பரத்வாஜா நகர், வரதராஜபுரம், சென்னை, தமிழ்நாடு 602 103 **கடன் கணக்கு எண்.** HOU/CHE/1016/327472 கடன் தொகை : ரூ.24,72,000/- (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து எழுபத்திரெண்டாயிரம் மட்டும்)	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், பிளாட் எண். எப்2, விஸ்தீரணம் 836 சதுர அடி, முதல் தளம் மற்றும் கார் பார்கிங் உட்பட. கோல்டன் ஹோம்ஸ். மொத்தம் 1807 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 412 சதுர அடியை உள்ளடக்கி உள்ளது. அதன் சர்வே எண்.230/4, வரதராஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் மனை எண்.19, சரஸ்வதி நகர் விரிவு, வரதராஜபுரம். எல்லைகள் மற்றும் விஸ்தீரணம் வடக்கு : மனை எண்.20, தெற்கு : மனை எண்.18, கிழக்கு : காலி மனை, மேற்கு : 20 அடி சாலை. **சொத்தின் உரிமையாளர் : திருமதி. கே. வெண்ணிலா, க/பெ. திரு. காளிஸ்வரன் முத்துசாமி**	1. 27.08.2024 2. சுவாதீனம் 3. 05.01.2018 4. 04.01.2018 அன்று செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.25,68,725.45/– (ரூபாய் இருபத்தைந்து லட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்று இருபத்தைந்து மற்றும் நாற்பத்தைந்து பைசா மட்டும்) மற்றும் 05.01.2018 முதல் முழு தொகையும் செலுத்தும் நாள் வரையிலான பொருந்தக்கூடிய வட்டி

இதர விவரங்களுக்கு திரு. ராஜேந்தர் தஹியா (மொபைல் எண்.84482 64515), திரு. விஷால் (99410 16600) மற்றும் திரு. வேல்முருகன் (+91 9884718338) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்

தேதி : 29.08.2024
இடம்: சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

படிவம் எண். URC-2

நிறுவனங்கள் சட்டம் 2013, அத்தியாயம் XXI. பகுதி 1–ன் கீழ் பதிவு பற்றிய அறிவிப்பு அளிக்கும் விளம்பரம்.

(நிறுவனங்கள் சட்டம் 2013 விதி பிரிவு 374(பி) மற்றும் நிறுவனங்கள் (பதிவு அதிகாரம்) விதிகள் 2014–ன் கீழ் விதி 4(1) ன் படி)

1. நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 366–ன் துணைப்பிரிவு (2)ன் படி **உலோகம் அனளிடிகல் சர்வீசஸ், சென்னை** அத்தியாயத்தின் பகுதி 1–ன் கீழ் ஒரு நிறுவனம் பதிவு செய்யப்படலாம் என்று சென்னையில் உள்ள பதிவாளருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறிவிக்கிறோம். நிறுவனங்கள் சட்டம் 2013–ன் அத்தியாயம் XXI. பகுதி 1–ன் படி **உலோகம் அனளிடிகல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்** என்ற பெயருடன் நிறுவனமாக (பங்குகளால் வரையறுக்கப்பட்டது) பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. முன்மொழியப்பட்ட நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு :

சேவை வழங்குநரின் வணிகத்தைத் தொடர, உலோகங்கள், உலோகம் அல்லாத, பிளாஸ்டிக்ஸ், ரப்பர், ஜவுளிப் பொருட்கள், போன்ற பொறியியல் பொருட்களுக்கான அனைத்து வகையான சோதனை சேவைகளையும் வழங்குதல். இரசாயனம், இயந்திரம், உலோகவியல், உலோகங்களின் அரிக்கும் நடத்தை, நீர் பகுப்பாய்வு, சுற்றுச்சூழல் ஆய்வுகள், மூன்றாம் தரப்பு ஆய்வு சேவைகள், FEMA, தோல்வி பகுப்பாய்வு, உடல் வேதியல், பொறியியல் பொருட்களின் உயிரியல் பண்புகள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், தொழில்நுட்ப பயிற்சி ஆய்வகம், ஆய்வக உபகரணங்களின் விற்பனை மற்றும் சேவை நுகர்பொருட்கள் மற்றும் இதர அறிவியல் சேவைகள்.

3. திட்டமிடப்பட்டுள்ள நிறுவனத்தின் சட்ட மற்றும் திட்ட விதிமுறைகள் (Memorandum and Articles of Association) நகலை அலுவலகம் அமைந்துள்ள **உலோகம் அனளிடிகல் சர்வீசஸ், எண்.442, டிஎஸ்கே டவர், சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600098, தமிழ்நாடு** என்ற முகவரியில் பார்வையிடலாம்.

இந்த விண்ணப்பம் மீது எவருக்கேனும் ஆட்சேபம் இருப்பின், அவர்களது ஆட்சேபத்தை பதிவாளர், மத்திய பதிவு மையம் (CRC), இந்திய பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (IICA), பிளாட் எண். 6,7,8, பிரிவு 5, IMT மனேசர், குர்கான் மாவட்டம் (ஹரியானா) - 122050, அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான இருபத்தோரு (21) நாட்களுக்குள் எழுத்து மூலமாக அனுப்ப வேண்டும். எதிர்ப்பதற்கான காரணத்தை குறிப்பிட்டு அதன் நகல் ஒன்றை நிறுவனத்தின் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்திற்கு அனுப்ப கோரப்படுகிறது.

விண்ணப்பதாரர்களின் பெயர்கள்
T. மார்ஷலின் டோலி,
S. கிருத்திகா,
பூஜா அரோரா
தேதி : 29-08-2024

SPIC

ஸதர்ன் பெட்ரோகெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

CIN: L11101TN1969PLC005778
பதிவு அலுவலகம்: ஸ்பிக் ஹவுஸ், 88 மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை – 600 032.
Phone: 044-22350245.
E-mail: spiccorp@spic.co.in ; shares.dep@spic.co.in website: www.spic.in

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

கார்ப்பரேட் விவகாரங்கள் துறையால் வெளியிட்டுள்ள பொதுச் சுற்றறிக்கை எண்.09/2023 தேதி 25/09/2023 மற்றும் 07/10/2023 அன்று செபி வெளியிட்டுள்ள சுற்றறிக்கை எண்.SEBI/HO/CFD/PoD2/P/CIR/2023/167ன் (கூட்டாக "மேற்சொன்ன சுற்றறிக்கைகள்") படியும் நிறுவனத்தின் 53வது வருடாந்திர பொதுக்கூட்டம் வியாழக்கிழமை, செப்டம்பர் 19, 2024 அன்று மாலை 4.30 மணிக்கு (இந்திய நேரப்படி), வீடியோ கான்பரன்சிங் (VC) / பிற ஆடியோ விஷுவல் வழிமுறைகள் (OAVM) மூலமாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்த வருடாந்திர பொதுக்கூட்டம் பொது இடத்தில் கூடாமல் மேற்சொன்ன சுற்றறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளின் படி நடத்தப்படும்.

மேற்சொன்ன சுற்றறிக்கைகளின்படி, கம்பெனி/டெபாசிட்டரிகள்/பங்கு பரிமாற்ற முகவரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மட்டுமே மின்னணு மூலமாக வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2023-24ம் ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையை 28 ஆகஸ்ட், 2024 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. இவை நிறுவனத்தின் இணைய தளம் https://www.spic.in/investors/financial-results/, நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணைய தளம் www.nseindia.com மற்றும் CDSL இணைய தளம் www.evotingindia.com விலும் கிடைக்கப்பெறும். ஆண்டு வருடாந்திர அறிக்கையின் அச்சு நகல் பங்குதாரர்களின் வேண்டுகோள்படி பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அஞ்சலில் அனுப்பிவைக்கப்படும்.

மின்னணு வாக்குப்பதிவு மூலம் அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது மின்னணு மூலம் வாக்களிக்கும் உறுப்பினர்களின் தகுதியை நிர்ணயிக்கும் தேதி வியாழக்கிழமை 12 செப்டம்பர், 2024 (நிர்ணய தேதி / Cut-Off Date) ஆகும். மேலும், கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91ன் படியும் மற்றும் செபி ரெகுலேஷன் 2015, 42 விதியின்படி வெள்ளிக்கிழமை, 13 செப்டம்பர், 2024 முதல் வியாழக்கிழமை 19, செப்டம்பர், 2024 வரை (மேற்கூறிய இரு தினங்கள் உட்பட) நிறுவனத்தின் உறுப்பினர் பதிவேடும், பங்கு பரிமாற்ற புத்தகங்களும் மூடப்பட்டிருக்கும்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் நிறுவனம் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014ன், செபி ரெகுலேஷன் விதி 44ல் கண்டவாறு, உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டம் தொடர்பாக தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு செய்திட நிறுவனம் சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் (CDSL) உடன் மின்னணு முறையில் வாக்களிக்க வசதி செய்து கொடுப்பதற்காக ஒப்பந்தம் செய்துள்ளது. மின்னணு முறையில் வாக்குகளை பதிவு செய்வது குறித்த விவரம் பொதுக்கூட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவிற்கான நேரம் திங்கிட்கிழமை, 16 செப்டம்பர், 2024 காலை 9.00 மணிக்கு தொடங்கி புதன்கிழமை, 18 செப்டம்பர், 2024 மாலை 5.00 மணிக்கு முடிவடையும். தொலைநிலை மின்னணு வாக்குப்பதிவு முறை, மேற்சொன்ன நேரத்திற்குப்பிறகு செயலிழக்கப்படும். பங்குதாரர்கள் தங்கள் வாக்குகளை அளித்த பிறகு மாற்ற அனுமதி இல்லை.

உறுப்பினர் பதிவேட்டில் நிர்ணயிக்கப்பட்ட தேதி அன்று பதிவு பெற்றுள்ள உறுப்பினர்கள் அல்லது டெபாஸிட்டரிகளால் பயன்பெறும் உரிமையாளர்கள் பதிவேட்டில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் மட்டுமே தொலைநிலை மின்னணு வாக்கு வசதியை பயன்படுத்தி அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு மூலம் வாக்களிக்க முடியும். தொலைநிலை மின்னணு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பா.சந்திரா & அசோசியேட்ஸ் பயிற்சியிலுள்ள நிறுவன செயலர் (Practising Company Secretaries, Chennai) அவர்களை நிறுவனம் மின்னணு வாக்குப்பதிவு வெளிப்படையாகவும், நேர்மையுடனும் நடைபெறுவதை கண்காணிக்கவும், உறுதி செய்யவும், நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. வாக்குப்பதிவு முடிவுகள் நிறுவனங்கள் சட்டம் 2013 மற்றும் செபி (LODR) விதிமுறைகள், 2015ன் அடிப்படையில் வெளியிடப்படும். மேலும் முடிவுகள் நிறுவனத்தின் இணையதளத்தில் வெளியிடப்படுவதோடு (www.spic.in) தேசிய பங்குச்சந்தைக்கும் மற்றும் CDSL இணையதளத்திலும் அறிவிக்கப்படும்.

ஈவுத்தொகை வரும் 53வது பொதுக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் 19 செப்டம்பர் 2024 அன்று காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்களுக்கும் மேலும் மின்னணு முறையில் பங்கு வைத்திருப்பவர்களுக்கும் மற்றும் 19 செப்டம்பர், 2024 அன்று முடிவில் பங்கு வைத்திருப்பவர்களுக்கும் ஈவுத்தொகைக்கு தேதி நிர்ணயம் செய்யப்பட்டு 18 அக்டோபர், 2024 அல்லது அதற்கு முன்னர் வழங்கப்படும்.

ஈவுத்தொகையை வங்கி கணக்கில் பெற பங்குதாரர்கள் தங்கள் வங்கி கணக்கு விபரங்களை பதிவு மேம்படுத்தல் டெபாஸிட்டரி பார்டிசிபேன்ட் அல்லது கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட் உடன் Form ISR-1 படிவத்தை பதிவிறக்கம் செய்து நிரப்பி, 19 செப்டம்பர், 2024குள் தேவையான சான்றுகளுடன் சமர்ப்பிக்கலாம். 2023-24 ஆண்டிற்கான ஈவுத்தொகையிலிருந்து செலுத்தக்கூடிய வருமான வரி பிடித்தம் செய்யாமல் இருக்க Form 15G/15H விபரங்களை தனிநபர்கள் அளிக்க வேண்டும்.

இதன்பொருட்டு, வேறு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், உறுப்பினர் திரு.ராகேஷ் தால்வி (022-23058542/43), மூத்த மேலாளர், CDSL, 25வது மாடி, மாரத்தான் ப்யூச்சரக்ஸ், N.M.ஜோஷி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை - 400 013 மின்னஞ்சல்: helpdesk:evoting@cdslindia.com உறுப்பினர்கள் பதிவாளர், தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலர் - திரு.பி.முரளிதரன், இணை மேலாளர், கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், 044-28460718 அல்லது நிறுவனத்தை shares.dep@spic.co.in / investor@cameoindia.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்ளலாம்.

இயக்குனர் குழு உத்தரவின்படி
ஸதர்ன் பெட்ரோகெமிகல் இண்டஸ்ட்ரீஸ்
கார்ப்பரேஷன் லிமிடெட்டுக்காக,

இடம்: சென்னை
நாள் : 29 ஆகஸ்ட், 2024
எம்.பி. கணேஷ்
செயலாளர்